1968 பிப்ரவரி 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவிற்குப் பதில் சொல்லாமல் இருப்பதற்கு அமைச்சருக்கு உரிமை உண்டு.

சுற்றுலா மாளிகைகள்

*106 **வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல-செய்தித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

யாத்திரீகர் ஸ்தலமாக விளங்கும் ஸ்ரீரங்கத்தில் டூரிஸ்ட் பங்களாக்கள் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : ஸ்ரீரங்கம் தமிழ்நாட்டில் தலைசிறந்த யாத்திரிகர் ஸ்தலமாக இருந்து வருகிறது. ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய கலைச் சிறப்பை அறிந்த யுனெஸ்கோ பல லட்சக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாக கொடுத்து சீர்திருத்திக் கொண்டு வருகிறது. ஆகவே, திருச்செந்தூரில் கட்டியுள்ளது போல் ஸ்ரீரங்கத்திலும் டூரிஸ்ட் பங்களாக்களைக் கட்டுவது பற்றி இனியாவது பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஸ்ரீரங்கத்திற்கும் திருச்சிக்கும் இடையே ஏறத்தாழ மூன்று மைல் தூரந்தான் இருக்கிறது. பெரும்பாலான பயணிகள் திருச்சியில் தங்கியிருந்து ஸ்ரீரங்கத்திற்குச் செல்லுகிறார்கள். அங்கிருந்து ஸ்ரீரங்கத்திற்கு இரண்டு நிமிஷத்திற்கு ஒரு பஸ் போகிறது. ஆகவே, ஸ்ரீரங்கத்தில் இப்போது டூரிஸ்ட் பங்களா கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எம். எஸ். மணி : ஸ்ரீரங்கத்தில் அதிகாலத்தில் ஏராளமான சத்திரங்களைக் கட்டிப் போட்டிருக்கிறார்கள். இப்போது புதிதாக ஒன்றிரண்டு ஓட்டல்களில் ரூம் கட்டி னால்கூட அங்கு தங்குவதற்கு யாரும் செல்வதில்லை. திருச்சி மையமாக இருப்பதால் அங்குதான் தங்குகிறார்கள். ஆகவே ஸ்ரீரங்கத்திற்கு டூரிஸ்ட் பங்களா இப்போது அவசியமில்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா ?

(விடை இல்லை)

***107 *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state whether there is a proposal to construct a Tourist Bungalow in Kumbakonam town ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இத்தகைய திட்டம் எதுவும் அரசிடம் தற்பொழுது இல்லை.

திரு. நா. காசிராமன் : முதல் கேள்விக்குப் பதில் அளிக்கும் போது திருச்சி ஸ்ரீரங்கத்திற்கு மூன்று மைல்களுக்குள்ளாக இருக்கிறது, அங்கு டூரிஸ்ட் பங்களா இருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மை. தஞ்சை ஜில்லாவில் கும்பகோணம் வாணிபத் துறையிலும், விவசாயத் துறையிலும், மத சம்பந்தமாகவும், கல்வி சம்பந்தமாகவும் மிக முக்கியமான ஒரு நகரம். அங்கு வந்துபோவோர்களின் எண்ணிக்கை அதிகம். அங்குள்ள பயணி மாளிகையில் இடம் போதவில்லை ; எஸ்டிமேட்ஸ் கமிட்டி சார்பில் வந்தவர்கள் கூட சமீபத்தில் கஷ்டப்பட்டார்கள் என்பதையும் உணர்ந்து அரசாங்கம் அங்கு ஒரு சுற்றுலா மாளிகை கட்ட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கல்வி சம்பந்தப் பட்டவர்கள், வாணிகர்கள் செல்கிறார்கள் என்றால் இப்போதுள்ள வசதிகளே ஏராளமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தவிர பக்தர்கள் செல்வதற்காக என்று கட்டித் தருவதற்கான அவசியம் இல்லை. கும்பகோணத்தில் 12